செ.வெ.எண்: 576/2016 நாள்: 26.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், நாகர்கோவில், கோணத்தில் உள்ள கேந்திரிய வித்யாலாயா பள்ளியில் இன்று (26.08.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணத்தில் உள்ள கேந்திரிய வித்யாலாய பள்ளியில் இன்று (26.08.2016) நேரில் சென்று, திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

முதலில் வகுப்பறைக்கு சென்று, மாணவ, மாணவியர்களிடம் குறைகளை கேட்டறிந்து, வருகை பதிவேடுகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவ, மாணவியர்கள் கல்வியை நன்று கற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுரைகள் வழங்கினார்.

பின்னர் கணினி அறை, நூலகம், விளையாட்டு மைதானம், உயிரியல் ஆய்வகம், கலையரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆகியவற்றை பார்வையிட்டும், கழிப்பறையில் தண்ணீர் தடையின்றி வருகிறதா என்பதை பள்ளி மாணவ, மாணவியர்களிடம் கேட்டறிந்தார்.

ஆய்வின்போது பள்ளி தலைமையாசிரியர் திரு. செந்தில்குமார், திரு. வேல்முருகன், திரு. பார்த்திபன், திரு. கனகராஜ், திரு. இராஜாராம், திரு. கிஷோர், திரு. எம்.ஆர்.முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.